# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணை மதிப்பீட்டு பரீட்சை - 2022

| தரம் - 10 | கர்நாடக சங்கீதம் | நேரம்: 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ....................................................................................

பகுதி - I

01. சபாகானத்திற்கும் அப்பியாசகாளத்திற்கும் பொதுவான உருப்படி
1) கீதம் 2) பதம் 3) வர்ணம் 4) தில்லானா

02. "தகிடதகதிமி" என்ற ஜதியைக் குறிக்கும் தாளம்
1) திஸ்ரசாபு 2) கண்டசாபு 3) சங்கீர்ணசாபு 4) மிஸ்ரசாபு

03. திருவிசைப்பா பாடுவதற்கேற்ற இராகம்
1) ஆனந்தபைரவி 2) மோகனம் 3) மத்தியமாவதி 4) காம்போதி

04. தமிழிசையில் உழை எனக் குறிப்பிடப்படும் ஸ்பரம்
1) ஸட்ஜம் 2) ரிஷபம் 3) தைபதம் 4) பஞ்சமம்

05. மத்தியமாவதி இராகத்தின் தாய் இராகம்
1) கல்யாணி 2) கரகரப்பிரியா 3) தோடி 4) சாருகேசி

06. ஒரே நேரத்தில் வெவ்வேறு ஸ்தாயிகளில் 2,3 ஸ்வரங்கள் வாசிக்கக்கூடிய வாத்தியம்
1) பஹுத்வனி வாத்தியம் 2) நிஷ்கள வாத்தியம்
3) சகலவாத்தியம் 4) ஏகத்வனி வாத்தியம்

07. வில்லுப்பாட்டு நிகழ்ச்சியில் வாசிக்கப்படும் வாத்தியம்
1) மிருதங்கம், வயலின், கடம், ஓர்கன்
2) வீணை, புல்லாங்குழல், உடுக்கை, கிற்றார்
3) மிருதங்கம், ஹார்மோனியம், தவில், குழல்
4) விற்கடம், வில்லு, உடுக்கை, ஹார்மோனியம்

08. மாத்ருகாபதங்கள் இடம்பெறும் உருப்படி
1) வர்ணம் 2) கீதம் 3) அலங்காரம் 4) ஜதீஸ்வரம்

09. அநிபந்த உருப்படி வகைகளாவன
1) தேவாரம், கீர்த்தனை, திருப்புகழ் 2) திருப்புகழ், வர்ணம், கீதம்
3) திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, வெண்பா 4) வர்ணம், ஜதீஸ்வரம், ஸ்வரஜதி

10. எல்லா ஸ்வரங்களும் கோமளமாக அமைந்த இராகம்
1) தோடி 2) மாயாமாளவகௌளை
3) சங்கராபரணம் 4) மத்தியமாவதி

11. இராக தாள அமைப்புடன் கூடிய உருப்படிகளில் மிகவும் பழமையானது,
1) கீர்த்தனை 2) கீதம் 3) வர்ணம் 4) தேவாரம்

12. தாது ஆடுவதற்காகவும் மாது அபிநயத்திற்காகவும் அமைந்தது.
1) வர்ணம் 2) தானபர்ணம் 3) பதவர்ணம் 4) தில்லானா

13. உற்றுமை சேர்வது எனும் தேவாரம் பாடப்பட்ட பண்.
1) செந்துருத்தி 2) நட்டபாடை 3) பழம்பஞ்சுரம் 4) பழம்தக்கராகம்

14. மத்தியமாவதி இராகத்தின் ஆரோகண அவரோகணம்
1) ஸரிகமபநிஸ் - ஸ்ரிபகரிஸ 2) ஸரிமபநிஸ் - ஸ்நிபமரிஸ
3) ஸரிகமபதஸ் - ஸ்தபகரிஸ 4) ஸரிகபதஸ் - ஸ்நிதபமகரிஸ



kalvi.lk

15. வீணை வாத்தியத்தில் உள்ள தந்திகள்
   1) 7   2) 5   3) 4   4) 24

16. வெண்பா பாடப்படும் இராகம்
   1) ஜாம்போதி   2) மோகனம்   3) சங்கராபரணம்   4) காபி

17. ரஞ்சனையின் பொருட்டு அந்நியஸ்வரத்தை எடுத்துக் கொள்ளும் இராகம்
   1) வர்ஜராகம்   2) உபாங்க ராகம்   3) பாஷாங்க ராகம்   4) வக்ரராகம்

18. ஓர் அலங்காரம் எடுத்துக்கொள்ளும் ஆவர்த்தளத்தின் எண்ணிக்கை.
   1) 7   2) 10   3) 12   4) 5

19. வாத்திய த்ரயத்தில் முதலாவதாக இடம்பெறும் வாத்தியம்.
   1) வீணை   2) மிருதங்கம்   3) வேணு   4) குழல்

20. தோடி இராகத்தைப் பாடுவதில் தேர்ச்சி பெற்றவர்
   1) நரசய்யர்   2) ஸீதாமரய்யர்   3) முத்துத்தாண்டவர்   4) தியாகராஜசுவாமி

21. வர்ணத்தின் முற்பகுதி எவ்வாறு அழைக்கப்படும்.
   1) உத்தராங்கம்   2) கடைசிபகுதி   3) முத்தாய்ஸ்வரம்   4) பூர்வாங்கம்

22. ஜனக இராகத்தின் பண்பாக அமையாதது.
   1) ஆரோகண அவரோகணம் சம்பூர்ணமாக அமைந்திருத்தல்
   2) கிரம சம்பூர்ண ஆரோகண அவரோகணம்
   3) ஆரோகண அவரோகணத்தில் ஸ்வரங்கள் விலக்கப்பட்டிருத்தல்
   4) ஆரோகண அவரோகணம் அஷ்டகமாக அமைந்திருத்தல்

23. கண்டஜாதி அடதாளத்தின் அங்கமாக அமைவது
   1) $|_5\,|_5 0 0$   2) $|_7\,|_7 0 0$   3) $|_3\,|_3 0 0$   4) $|_4\,|_4 0 0$

24. தாய் இராகங்களின் மொத்த எண்ணிக்கை
   1) 76   2) 74   3) 56   4) 72

25. $\overline{\text{ஸ்நிதப}}$ ஸ்வரங்களின் மேல் ஒரு படுக்கைக்கோடு போட்டால் இந்த இராகத்தின் அட்சரகாலம் குறிப்பது.
   1) 1   2) $\frac{1}{2}$   3) $\frac{1}{4}$   4) $\frac{3}{4}$

26. தா; நீதா பா; மகாரிகரீஸா நீதா; பா எனும் ஸ்வரக் கோர்வை குறிக்கும் அட்சரகாலம்.
   1) 25   2) 29   3) 32   4) 27

27. ஆவர்த்தனத்தைக் குறித்துக் காட்டுவது
   1) 〰   2) |   3) —   4) ||

28. சங்கீத அளவுகோல் என சிறப்பித்துக் கூறப்படும் வாத்தியம்
   1) வீணை   2) மிருதங்கம்   3) வயலின்   4) குழல்

29. "தெருவில் வாரானோ" எனும் உருப்படி
   1) தில்லானா   2) வர்ணம்   3) பதம்   4) கீர்த்தனை

30. முத்துத்தாண்டவர் பிறந்த இடம்
   1) நரிமணம்   2) புரந்தடகட   3) திருவாரூர்   4) சீர்காழி

31. தேவாரம் தாளத்துடன் பாடப்பட்ட காலம்
   1) 7 - 8ம் நூற்றாண்டு   2) 1 - 3ம் நூற்றாண்டு
   3) 3 - 6ம் நூற்றாண்டு   4) 4 - 6ம் நூற்றாண்டு

32. வீணை வாசிப்பதில் தேர்ச்சி பெற்றவர்களின் சிறப்புப் பெயர்
   1) வைஷ்ணவர்   2) வைணீகர்   3) வித்துவான்   4) சீர்காழி

Education கல்வி அதியாபන

33. “பேரின்ப பதங்கள்” என சிறப்பாக பதங்கள் அழைக்கப்படும் வாக்கேயக் காரர்
1) முத்துத்தாண்டவர் 2) புரத்தரதாஸர் 3) பாபநாசம்சிவன் 4) முத்துஸ்வாமிதீஷிதர்

34. தானவர்ணத்தில் உபபல்லவி என்றழைக்கப்படும் அங்கம்
1) பல்லவி 2) அனுபல்லவி 3) சரணம் 4) முத்தாயிஸ்வரம்

**பின்வரும் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு 35 – 38 வரையான வினாக்களுக்கு விடையளிக்குக.**

A. 17ம் நூற்றாண்டில் தற்போதைய உருவத்தையும் அமைப்பையும் பெற்ற இசைக்கருவி
B. வாத்தியத்ரயத்தில் முதலாவதாக அமைத்த வாத்தியம்
C. சுருத்திக்காகவும் தாளத்திற்காகவும் தந்திகள் பொருத்தப்பட்டது.
D. தண்டின் ஒரு பக்கத்தில் குடமும் மற்றொரு பக்கத்தில் யாழி முகமும் இணைக்கப்பட்டிருக்கும்.

35. இதில் குறிப்பிடப்படும் இசைக்கருவி எது?
1) வயலின் 2) வீணை 3) கிற்றார் 4) ஸிதார்

36. இவ்வாத்தியம் எந்த மன்னர் காலத்தில் முழு வளர்ச்சி அடைந்தது.
1) மகேந்ர மன்னன் 2) இராஜஇராஜசோழ மன்னன்
3) சுவாதித் திருநாள் மகாராஜா 4) இரகுநாத மன்னர்

37. இவ்வாத்தியத்தில் காணப்படும் மெட்டுக்களின் எண்ணிக்கை
1) 27 2) 24 3) 22 4) 35

38. இவ்வாத்தியத்தை வாசிப்பதில் பிரபல்யமானவர்கள்.
1) காரைக்குடி சாம்பசிவம், S.பாலசந்தர்
2) TR. நவனீதம், T.R. மகாலிங்கம்
3) D.N. கிருஷ்ணன், லால்குடி ஜெயராமன்
4) காரைக்குடி R. மணி, யாழ்ப்பாணம் A. சந்தானக்கிருஸ்ணன்

39. ப்ரக்ருதி ஸ்வரங்களாவன
1) ரி, க, ம, த 2) க, ம, நி 3) ஸ, ப 4) த, நி

40. “கண்ணன் குழல்வாரக் காக்கையை அழைத்தல் எனும் பதிகத்தைப் பாடியவர்.
1) சுந்தரர் 2) சம்பந்தர் 3) ஆண்டாள் 4) பெரியாழ்வார்

(1x40 = 40 புள்ளிகள்)

## பகுதி - II

❖ **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை அளிக்குக.**

01) 01. அலங்காரத்திற்குப் பின் ஸ்வரசாகித்திய ரூபமாக கற்பிக்கப்படும் உருப்படி எது?
02. ஜன்ய இராகத்திற்கு வழங்கப்படும் மறு பெயர்கள் 2 தருக.
03. மகேந்திர மன்னனின் இசைப்புலமையைக் காட்டும் கல்வெட்டு எது?
04. முத்துத்தாண்டவரால் முதன்முதலாக பாடப்பட்ட கீர்த்தனைத் தருக.
05. மகேந்திரவர்மனுக்கு கிடைத்த விருதுகள் எவை?
06. தாளத்தில் ஜாதி பேதமடையும் அங்கம்.
07. தாளஜாதி சஞ்சாரங்களுடன் பிரகாசிக்கும் உருப்படி எது?
08. நாயகன், நாயகி பாவமாக இயற்றப்பட்ட உருப்படி எது.
09. நிஷாதாந்திய இராகத்திற்கு உதாரணம் தருக?
10. பெருமாளே என்று நிறைவடையும் உருப்படி.

(12 புள்ளிகள்)

02) 01. புராதன சங்கீத கிரந்தங்களில் காணப்படும் இராகம் எது?
02. இவ் இராகத்தின் ஆரோகண அவரோகணத்தை தருக?
03. இவ் இராகத்தின் மேள எண் ஸ்வரஸ்தானம் என்பவற்றைத் தருக?


kalvi.lk

04. இவ் இராகத்தின் விஷேச, சிறப்பு அம்சங்கள் என்பவற்றைத் தருக.

05. இவ் இராகத்தின் சஞ்சாரத்தை எழுதுக?

06. இவ் இராகத்தில் அமைந்த உருப்படிகளைத் தருக?

(1+2+3+3+1+2 = 12 புள்ளிகள்)

03) "பேரின்ப பதங்கள்" என்று அழைக்கப்படும் பதங்களை இயற்றிய வாக்கேயக்காரர் யார்? இவரின் வாழ்க்கைக் காலம், பிறந்த இடம், இளமைக்காலம், வாழ்க்கைச் சம்பவங்கள், இவர் இயற்றிய உருப்புகள், இவரின் உருப்புகளின் சிறப்பு, என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இவரின் வாழ்க்கை வரலாற்றை ஆராய்க.

(12 புள்ளிகள்)

04) 01. வாத்தியத்தலத்தின் முதலாவதாக இடம்பெறும் வாத்தியம்.

02. இவ்வாத்தியத்தின் படம் வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக.

03. இவ்வாத்தியத்தின் அமைப்பினை விளக்கி சுருதி சேர்க்கும் முறையினைக் குறிப்பிடுக.

04. இவ்வாத்தியத்தின் சிறப்பினைத் தருக.

05. இவ்வாத்தியத்தை வாசித்து பிரபல்யமான வித்துவான்கள் மூவரின் பெயரினைத் தருக.

(1+4+4+2+1 = 12 புள்ளிகள்)

05) கண்டஜாதி அடதாள அலங்காரத்தை இராகம், தாளம், அங்க அடையாளத்துடன் எழுதுக.
(இராகம், தாளம், இயற்றியவர், ஆ/க, அ/க என்பவற்றை கருத்திற் கொள்க)

(12 புள்ளிகள்)

06) கீழ்வரும் இலட்சணங்கள் 2ற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1. பதம்
2. வர்ணம்
3. கீர்த்தனை

(2x6 = 12 புள்ளிகள்)

07) இந்தியாவில் 7ம் 8ம் நூற்றாண்டுகளின் இசை வளர்ச்சி பற்றி ஆராய்க.

(12 புள்ளிகள்)



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி அධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457